# ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கான சுய அரசாங்கம்

***கலாநிதி தனபாலசிங்கம் கிருஷ்ணமோகன்***
*அரசறிவியல் பேராசிரியர்*
*கிழக்குப்பல்கலைக் கழகம், இலங்கை*

## *1. அறிமுகம்*

*முப்பது வருடங்கள் நீடித்த உள்நாட்டு யுத்தத்தின் இறுதிக்காலப்பகுதியில் ஐக்கிய நாடுகள் சபையினால் வெளியிடப்பட்ட தகவல்களின் படி 10,000 வரையிலான பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாமெனவும், பின்னர் வெளிவந்த ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கையின் படி 40,000 வரையிலான பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாமெனவும் கூறப்படுகின்றது. சிலர் இவ்வெண்ணிக்கை இதனையும் விட அதிகமானது எனக் கூறுகின்றனர். ஆயினும் சார்ள்ஸ் பெட்றி 2012 ஆம் ஆண்டு சமர்பித்த உள்ளக அறிக்கையில் 70,000 வரையிலான பொது மக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் எனக் கூறப்பட்டுள்ளது. யுத்தத்தினால் பலர் அவயவங்களை இழந்தனர். பலர் கடும்காயங்களுக்குள்ளாகினர். பல பெண்கள் பாலியல் வன்முறைக்குள்ளாகினர். பலர் காணாமல் போனார்கள். பெரும்பாலானவர்கள் மன அழுத்தங்களுக்குள்ளாகினர். பலர் சர்வதேச நியமங்களுக்குட்படாத தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டனர். பத்து இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் அரசியல் அகதிகளாகி பாதுகாப்பிற்காக நாட்டைவிட்டுத் தப்பிச் சென்றனர். ஏறக்குறைய ஐந்து இலட்சம் மக்கள் இதே காரணத்திற்காக உள்நாட்டுக்குள் இடம் பெயர்ந்தனர். உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் யுத்த வலயத்திற்குள்ளிருந்து உயிர்தப்பி வந்த மக்கள் இடப்பெயர்வு முகாம்களில் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டு பின்னர் அவர்களில் பெரும்பாலானவர்கள் விடுவிக்கப்பட்டனர். பலருக்கு என்ன நடந்தது என்பது இதுவரை தெரியவில்லை. இப்பின்னணியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழுகின்ற மக்களிற்கு அரசியல் தீர்வினைப் பெற்றுக்கொள்ள புதிய வியூகத்தினைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வகுத்தது. உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் நிகழ்ந்த வடமாகாணசபைத் தேர்தலுக்காக இது தனது கொள்கை அறிக்கையினை வெளியிட்டது. இக் கொள்கையறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு தமிழ் மக்களின் எதிர்காலம் எவ்வாறு அமையமுடியும் என்பது தொடர்பாகவும், எதிர்காலத்தினைத் தீர்மானிக்கும் அரசியல் காரணிகள் தொடர்பாகவும், சமாதான சகவாழ்க்கைக்கு அரசியல் காரணிகளை எவ்வாறு வடிவமைக்கலாம் என்பது தொடர்பாகவும் இக்கட்டுரை விவாதிக்கின்றது.*

## 2. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம்

தமிழ் தேசியக் கூட்டமைப்பு யுத்தத்திற்குப் பின்னர் "ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கான சுய அரசாங்கம்" ஒன்றை உருவாக்கும் இலக்குடன் தனது கொள்கை அறிக்கையினை வெளியிட்டது. இதில் கூறப்பட்டிருக்கும் விடயங்கள் தமிழ் மக்களின் உண்மையான அரசியல் அதிகாரங்களைப் பாதுகாப்பதற்கான முதல்படியாகக் கருதப்பட்டன. இதனை வடமாகாண சபைக்கு நடாத்தப்பட்ட தேர்தலில் மக்களிடம் கையளித்திருந்தது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்ட பின்னர் அரசாங்கத்திற்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் நிலவிவந்த மனக்கசப்பு மேலும் உச்சநிலையடைந்தது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கொள்கையறிக்கை உண்மையான நல்லிணக்கத்தையும், நீடித்து நிலைத்திருக்கக்கூடிய சமாதானத்தையும், இலங்கை மக்கள் அனைவருக்குமான அபிவிருத்தியையும் எய்துவதற்கு அதிகாரப் பகிர்வு அவசியமானது என வலியுறுத்தியதுடன், இவ் அதிகாரப் பகிர்வு பின்வரும் விடயங்களை உள்ளடக்கியிருக்க வேண்டும் (Colombo Telegraph, September 3rd 2013) எனவும் அது கோரியிருந்தது.

- தமிழ் மக்கள் தனித்துவமானதொரு தேசியமாகும். சிங்களமக்களுடனும், ஏனையவர்களுடனும் வரலாற்றுக்காலம் தொடக்கம் இலங்கையில் தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்,
- புவியியல் ரீதியாக இணைந்துள்ளதும், தமிழ் மொழியைப் பேசுகின்ற மக்கள் பெரும்பாண்மையாக வாழ்கின்றதுமான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தமிழ்பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடங்களாகும்,
- தமிழ்மக்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள்,
- வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் பேசும் முஸ்லிம் மக்களும் ஏற்றுக் கொள்ளும் வகையில் சமஸ்டிக் கட்டமைப்பினை உருவாக்கி, இணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்தில் அதிகாரப்பகிர்வு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்,
- காணி, சட்டமும் ஒழுங்கும், கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட சமூகப் பொருளாதார அபிவிருத்தி, வளங்கள் மற்றும் நிதி அதிகாரங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு பன்மைத்துவ இறைமையின் அடிப்படையில் அதிகாரப்பரவலாக்கம் வழங்கப்பட வேண்டும்.

*2013* ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் *21*ஆம் திகதி நடைபெற்ற வட மாகாண சபைத் தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு *353,595* வாக்குகளைப் பெற்று *(78.48%)* வெற்றிபெற்றது. இதன்மூலம் மொத்த *38* ஆசனங்களைக் கொண்ட வட மாகாணசபையில் *30* ஆசனங்களைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியது (Provincial Council Elections Results 2013). வட மாகாண சபைத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மூன்றில் இரண்டு பெரும்பான்மையினை

எதிர்பார்த்திருந்தது. ஆனால் வட மாகாண மக்கள் தமது விரைவில் மீளும் திறனையும், உறுதியான கொள்கையினையும் வாக்களித்தல் மூலம் வெளிப்படுத்தி ஐந்தில் நான்கு பெரும்பான்மையுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கொள்கைக்கு அங்கீகாரம் வழங்கியிருந்தனர். இதனைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மக்களிடம் சமர்ப்பித்திருந்த கொள்கையறிக்கைக்கும், அரசியல் அபிலாசைகளுக்கும் வழங்கப்பட்ட உயர்ந்த பட்ச அங்கீகாரமாக அப்போது கருதப்பட்டது. இதன்மூலம் பேச்சளவிலன்றி செயலில் செய்து காட்ட வேண்டிய பணிகள் அதிகளவில் உள்ளது என்பதை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் அனைத்தும் அப்போது புரிந்திருக்க வேண்டும்.

### 3. சமஸ்டிவாதம் - வரலாறு தந்த பாடம்

1925 ஆம் ஆண்டு தோற்றம் பெற்ற கண்டியத் தேசியப் பேரவை (Kandyan National Assembly), இலங்கையில் சமஸ்டி ஆட்சி ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும், அதன் மூலம் கண்டி மக்களுக்கு பிரதேச சுயாட்சி வழங்கப்பட வேண்டும் எனவும் 1927 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் கோரியது (Jeyaraj, October 19th 2022). ஆகவே இலங்கையில் சமஸ்டி முறைமைக்கான கோரிக்கை முதலில் கண்டிய தேசிய பேரவையிலிருந்தே தோன்றியது என்பது ஆழமாகக் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கா தமது அரசியல் வாழ்வின் ஆரம்பத்தில் அப்போது நிலவியிருந்த மாகாண நிர்வாகப் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கைக்கு சமஸ்டி அரசியலமைப்புத்தான் கூடியளவிற்கு பொருத்தமானது என்ற கருத்தை வெளிப்படுத்தினார். இது இலங்கையின் பல்வேறுபட்ட இனங்களிடையே கூடியளவு புரிந்துணர்வு ஏற்படுவதற்கு வழிவகுத்து அரசியல் ரீதியான அமைதி ஏற்படுவதற்கு வழி வகுக்கும் எனவும் அவர் நம்பியிருந்தார். அவர் கருதிய சமஸ்டி முறைமை கண்டியர்கள் கருதிய மூன்று அலகுகள் என்பதை விட விரிவானதொன்றாக இருந்தது. அதனைத் தொடர்ந்து 1949ஆம் ஆண்டிலிருந்து கடந்த எழுபது வருடங்களுக்கு மேலாக இலங்கை தமிழரசுக்கட்சி (சமஸ்டிக் கட்சி) சமஸ்டி அரசாங்க முறையினைக் கோரிவந்துள்ளது. சமஸ்டியை உருவாக்குவதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகமும், எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்காவும் ஒப்பந்தம் ஒன்றிலும் கைச்சாத்திட்டனர். பின்னர் இது கைவிடப்பட்டது.

1992 ஆம் ஆண்டு மங்கள முனசிங்கா தலைமையிலான பாராளுமன்றத் தெரிவுக்குழு பதின்மூன்றாவது அரசியல் யாப்புத் திருத்தத்தில் கூறப்பட்டுள்ள "பொதுப்பட்டியல்" அதிகாரத்தினை இல்லாதொழித்து அதனை மாகாணசபைகளின் அதிகாரப்பட்டியலுடன் இணைக்க வேண்டும் (Tamil nation) என ஆலோசனை கூறியிருந்தது. அப்போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டிருந்தன. இம்மாகாண சபையினைக் கருத்திற் கொண்டே அவர் தனது ஆலோசனையினை முன்வைத்திருந்தார்.

*1995, 1997, 2000* ஆம் ஆண்டுகளில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரணதுங்க ஒற்றை ஆட்சி முறையினை இல்லாதொழித்து பிராந்தியங்களின் ஒன்றியம் {Union of Regions' (Article 1(1)} என்ற பெயரில் புதியதொரு அரசாங்கமுறையினை உருவாக்க நகல் அரசியல் யாப்பு ஒன்றினை வரைந்திருந்தார். இந்நகல் யாப்பின் அத்தியாயம் XV பிராந்தியங்களின் அதிகாரப் பங்கீடு தொடர்பாக எடுத்துக் கூறியிருந்தது (Lionel Guruge, 2006) வடக்கு மற்றும் கிழக்குப் பிராந்தியங்களின் இணைப்பு என்பது தமிழ் மற்றும் முஸ்லீம் அரசியல் கட்சிகள் தமக்குள் ஆலோசித்து முடிவெடுத்துக்கொள்ள விடப்பட்டது.

*2002* ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் *05* ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஒஸ்லோவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது அரசாங்கப் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட ஜி.எல் பீரிஸ் "ஐக்கிய இலங்கைக்குள் சமஸ்டியை அடிப்படையாகக் கொண்டு வரலாற்று ரீதியாக தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசத்தில் உள்ளக சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டினை ஏற்றுக் கொண்டு அரசியல் தீர்வு காண்பதற்கு உடன்பட்டிருந்தார்" (TamilNet, December 5th 2002).

*2006* ஆம் ஆண்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவினை (All Party Representatives Committee) நியமனம் செய்த பின்னர் ஆற்றிய உரையில் "பண்டாரநாயக்கா செல்வநாயகம் ஒப்பந்தத்தினை நாங்கள் பகுப்பாய்வு செய்து பார்க்க வேண்டும். ஏனைய நாடுகளின் அனுபவங்களிலிருந்து பொருத்தமான பாடங்களை நாங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். தீர்வினை நான் ஒருபோதும் திணிக்கமாட்டேன். ஆனால் நீங்கள் தேசியப் பிரச்சினைக்கு தீர்வினைப் பெற்றுத் தரக் கூடிய பேச்சுவார்த்தைகளை உங்களுக்குள் நடாத்துங்கள்... மக்கள் தம்மை தாமே நிர்வகித்துக் கொள்ளவும், தங்களுடைய அரசியல், பொருளாதார சூழலைத் தாமே கட்டுப்படுத்திக் கொள்ளவும் பொறுப்பு வழங்கப்பட வேண்டும்... உலகில் பல நாடுகளில் இது வெற்றிகரமாக முயற்சிக்கப்பட்டுள்ளது. இதற்கு பல உதாரணங்கள் எமது அயல்நாடாகிய இந்தியா உட்பட பல நாடுகளில் உள்ளன. மோதலுக்கான பின்னணியை அடிப்படையாகக் கொண்டு நாட்டினுடைய இறைமையினைத் தியாகம் செய்யாது சாத்தியமானதும், ஆகக்கூடுதலானதுமான பரவலாக்கத்தினை நாம் உருவாக்குதல் வேண்டும்" (Amita Arudpragasam, 08.03.2013) எனத் தெரிவித்திருந்தார். இந்நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வடமாகாணத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சமஸ்டிக் கட்டமைப்புத் தொடர்பாக புதிதாக ஒன்றையும் முன்னிறுத்தியிருக்கவில்லை. வரலாறு மீள நிகழும் என்பதே நடந்துள்ளது. வரலாற்றினை மறுதலித்து அரசியலை நோக்குபவர்களுக்கு இது புதியதாக இருக்கலாம்.

## 4. பொறுப்பற்ற நிலை

ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் மற்றும் யாப்பு ரீதியான அதிகாரங்களை மக்கள் அனைவரும் பெற்று ஒன்றாக வாழ்வதற்கான சூழலை உருவாக்குவதற்காகப் பாராளுமன்ற தெரிவுக்குழுவினை அரசாங்கம் உருவாக்கியதுடன், தமிழ்தேசியக் கூட்டமைப்பினை இதில் இணைந்து பணியாற்ற வருமாறும் அழைப்பும் விடுத்திருந்தது.

அதேநேரம் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்வைத்த சிபாரிசுகளை நடைமுறைப்படுத்தி வருவதாக இலங்கை அரசாங்கம் கூறினாலும், முக்கியமான சிபாரிசுகளாகிய காணி, மனித உரிமைகள், நல்லாட்சி, நல்லிணக்கம், மற்றும் பொறுப்புக் கூறுதல் போன்ற விடயங்களை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கம் தாமதம் காட்டுவதாகக் குற்றஞ் சாட்டப்பட்டது. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகள் இலக்கம் 9.185 நீண்டகாலம் தீர்க்கப்படாமல் தாமதமாகி வரும் இலங்கையின் இனமோதலுக்கு அரசியல் தீர்வு காணுமாறு மோதலுடன் தொடர்புடையவர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தது. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின சிபாரிசு இலக்கம் 9.142 காணி விடயங்கள் தொடர்பாகக் கூறுகின்றது. உயர்பாதுகாப்பு வலயங்கள், இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலங்கள் என்பவற்றால் காணிகளை இழந்த மக்களுக்கு பொருத்தமானவகையில் நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும் (Report of The Commission of Inquiry on Lessons Learnt and Reconciliation, November, 2011) எனத் தெரிவித்திருந்தும், அரசாங்கம் இதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை முழுமையாக இதுவரை எடுக்கவில்லை. மேலும் இலங்கை அரசாங்கம் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இவ்விடயங்கள் தொடர்பாகக் கலந்தாலோசித்து ஆக்கபூர்வமான தீர்மானங்கள் எதனையும் நிறைவேற்றவில்லை. ஆனால் அதிகாரப்பரவலாக்கம் தொடர்பாக கலந்தாலோசிப்பதற்குப் பதிலாக மாகாண சபைகளுக்கு பதின்மூன்றாவது அரசியல் யாப்பு திருத்தம் மூலம் வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களை முழுமையாக வழங்குவது தொடர்பாக அரசாங்கம் விவாதித்து வருகிறது.

## 5. தமிழ் தேசியவாதக் கருத்தியல் - பின்னடைவுகள்

வட மாகாண மக்கள் போன்று கிழக்கு மாகாண மக்களும் தமது அரசியல் அறிவுப் பகிர்வினை இரண்டு தடவை நிகழ்ந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தல் மூலம் அனைவருக்கும் வழங்கியிருந்தனர். அரசியல் உரிமைகளை விடப் பொருளாதார அபிவிருத்தி தான் முதன்மையானது என்பதை கிழக்கு மாகாண மக்கள் தேர்தல் மூலம் வெளிப்படுத்தியிருந்தனர்.

கிழக்கு மாகாண சபைக்கான முதலாவது தேர்தல் 2008 ஆண்டு மே மாதம் 10 ஆம் திகதி நடைபெற்றது. இக்காலப்பகுதியில் மத்தியரசில் ஆட்சியமைத்திருந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் (UPFA) கூட்டுச் சேர்ந்திருந்த தமிழ் மக்கள் விடுதலை புலிகள் (TMVP) கட்சி 308,886 வாக்குகளைப் பெற்று

*(52.21 %* வாக்குகள்*)* மொத்த *37* ஆசனங்களில் *20* ஆசனங்களைப் பெற்று வெற்றி பெற்றதுடன், தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் தலைவர் எஸ். சந்திரகாந்தனை முதலமைச்சராக நியமனம் செய்தது. ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்திருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் *250,732* வாக்குகளைப் பெற்று *(42.38 %) 15* ஆசனங்களைப் பெற்றுக் கொண்டது. ஏனைய *2* ஆசனங்களையும் முறையே சிறிய கட்சிகளாகிய ஜனதா விமுக்தி பெரமுனா *9,390* வாக்குகளைப் பெற்று *(1.59 %) 1* ஆசனத்தையும், தமிழ் ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு *7,714* வாக்குகளைப் பெற்று *(1.30 %) 1* ஆசனத்தையும் பெற்றுக் கொண்டது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இலங்கைத் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மிகப்பெரிய கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தத் தேர்தலைப் புறக்கணித்திருந்தது. இதன் மூலம் இரண்டு பெரிய தேசியக் கட்சிகளுடன் தமிழ் மக்கள் விடுதலை புலிகளும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் கூட்டிணைந்து *559,618* வாக்குகளைப் பெற்றதுடன், *35* ஆசனங்களைத் தமக்கிடையில் பகிர்ந்தும் கொண்டனர். இத்தேர்தலில் *591,676* வாக்காளர்கள் வாக்களித்திருந்தனர் (Provincial Council Elections Results, 2008). தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இத்தேர்தலைப் புறக்கணித்துத் தமிழ் தேசியத்தை கிழக்கு மாகாணத்தில் தோற்கடிப்பதற்கும், கிழக்கு மாகாணத்தின் ஆட்சியைத் தீர்மானிக்கும் வலு (King makers). தேசியக் கட்சிகளுக்கு மட்டுமேயுள்ளது என்பதை நிரூபிப்பதற்கும் களம் அமைத்துக் கொடுத்திருந்தது.

கிழக்கு மாகாண சபைக்கான இரண்டாவது தேர்தல் *2012* ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 8ஆம் திகதி நடைபெற்றது. இக்காலப்பகுதியில் மத்தியரசில் ஆட்சியமைத்திருந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் கூட்டுச் சேர்ந்திருந்த தமிழ் மக்கள் விடுதலை புலிகள் (TMVP) *200,044* வாக்குகளைப் பெற்று *(31.58%) 37* ஆசனங்களில் *14* ஆசனங்களைப் பெற்றுக் கொண்டது. *2008* ஆம் ஆண்டு மாகாணசபைத் தேர்தலைப் புறக்கணித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இத்தேர்தலில் போட்டியிட்டு *193,827* வாக்குகளைப் பெற்று *(30.59%) 11* ஆசனங்களைப் பெற்றுக் கொண்டது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (SLMC) *132,917* வாக்குகளையும் *(20.98%)* மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி *74,901* வாக்குகளையும் *(11.82%)* பெற்று முறையே *7* மற்றும் *4* ஆசனங்களைப் பெற்றன. தேசிய சுதந்திர முன்னணி *9,522* வாக்குகளைப் பெற்று *(1.50%) 1* ஆசனத்தைப் பெற்றது. இத்தேர்தலில் *633,534* வாக்காளர்கள் வாக்களித்திருந்தனர் (Provincial Council Elections Results 2008). இதில் தமிழ் தேசியத்தினையும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இணைந்த சமஸ்டிமுறைமையினை முன்னிலைப்படுத்தித் தேர்தலில் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு *193,827* வாக்குகளை மட்டுமே *(30.59%)* பெற்றிருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கைக்கு எதிராக சுமார் 70% கிழக்கு மாகாண மக்கள் வாக்களித்திருந்தனர் என்பதைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு இத்தடவை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்சுடன் இணைந்து கிழக்கு மாகாண சபையை ஆட்சி செய்திருந்தது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கிடையிலான உடன்படிக்கை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வேட்பாளர் ஒருவர் இரண்டரை வருடங்கள் முதலமைச்சராகவும், அதன் பின்னர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்சின் வேட்பாளர் ஒருவர் முதலமைச்சராகவும் பணியாற்றுவர் எனக் கூறியிருந்தது. உடன்படிக்கையின் படி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மாகாண சபை உறுப்பினர் எம். என். அப்துல் மஜீத் முதலமைச்சராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். நான்கு மாகாண சபை அமைச்சர்களில் இப்ராஹிம் மொஹமட் மன்சூர் மற்றும் அஹமட் நசீர் ஜைனுலாப்தீன் ஆகிய இருவர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்சில் இருந்து அமைச்சர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். ஏனைய இருவர்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் கூட்டுச் சேர்ந்திருந்த ஏ.எல்.எம் அத்தாவுல்லா தலைமையிலான தேசியக் காங்கிரஸ்சிலிருந்து மீரா சாஹிபு உதுமாலெப்பே, மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் கூட்டுச் சேர்ந்திருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து திஸாநாயக்க விமலவீரவும் அமைச்சர்களாகக் தெரிவு செய்யப்பட்டனர்.

மாகாண சபைத் தேர்தலில் 22,338 வாக்குகளைப் பெற்றும் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் சார்பில் யாருக்கும் அமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கப்படவில்லை என்பது கருத்தில் கொள்ளப்பட வேண்டும். இத்தடவை கிழக்கு மாகாண சபை முழுமையாக முஸ்லீம் அங்கத்தவர்களால் ஆளப்படும் மாகாண சபையாக மாற்றப்பட்டது. கிழக்கு மாகாணத்தில் தமிழ் வாக்காளர்கள் பெரும்பாண்மையாக இருந்தும் இத்தடவை ஒரு மாகாண அமைச்சரைக் கூட நியமிக்க முடியவில்லை (Balachandran, September 26th 2012). கிழக்கு மாகாணசபை யாரால் ஆளப்பட வேண்டும் என்பதைப் தேசியக் கட்சி அல்லது மத்தியரசு மாத்திரமே தீர்மானிக் முடியும் என்பது மீண்டும் ஒரு தடவை காட்சிப்படுத்தப்பட்டது. இதன் மூலம் கிழக்கு மாகாணம் தமிழ்த் தேசியவாதக் கருத்தியலிலிருந்து விலகிச் செல்கின்றது என்றதொரு பிம்பம் உருவாக்கப்பட்டது.

## 6. முஸ்லீம்களின் அரசியல்

முஸ்லீம் அரசியல் தலைவர்கள் மூன்று வெவ்வேறு அரசியல் கட்சிகள் சார்பாக இத் தேர்தலில் போட்டியிட்டிருந்தனர். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் 07 முஸ்லீம் பிரதிநிதிகளும், ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் 01 முஸ்லீம் பிரதிநிதியும், ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் சார்பில் 07 முஸ்லீம் பிரதிநிதியும் வெற்றி பெற்றிருந்தனர். இவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து போட்டியிட்டிருந்தால் 15 பிரதிநிதிகளைக் கிழக்கு மாகாண சபையில் பெற்றிருக்க முடியும். கிழக்கு மாகாணத்தில் தனித்துவமானதொரு அரசியல் தளத்தினைப் பெற்றுள்ள முஸ்லிம் மக்கள் அரசியல் தலைவர்களின் சுயலாபம் கருதிய பெருளாதார அபிலாசைகளுக்கான செயற்பாடுகளால் தமது பலம்மிக்க

அரசியல் தளத்தினை இழந்தனர். இது தொடர்பாக "மன்னர் ஆட்சிக் காலத்திலிருந்தே ஆட்சியாளர்களுடன் இணைந்து சலுகைகள் பெறும் அடையாளச் சமூகமாக முஸ்லிம் மக்கள் வளர்ந்தவர்கள்" எனச் சிலர் வெளிப்படையாகக் கூறியும் இருந்தனர். இவ்வாறான முஸ்லீம் அரசியல் தலைவர்கள் முஸ்லிம் மக்கள் பலமானதும், தனித்துவமானதுமான அரசியல் சக்தியாக வளர்ந்தால், தமது சுய பொருளாதார அபிலாசைகளுக்காக ஆட்சியாளர்களுக்கு முண்டு கொடுக்கும் அரசியலுக்கு ஆபத்தாகிவிடும் என அஞ்சுகின்றனர்.

### 7. சிந்தனை மாற்றம்

இப்பின்னணியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இணைக்க எடுக்கப்படுகின்ற முயற்சி எதிர்வரும் காலங்களில் இலங்கையில் அரசியல் காட்சி நிலையில் சர்ச்சைகளையும், நீண்ட விவாதங்களையும் ஏற்படுத்தப் போகின்றது. இச்சர்ச்சையிலும், விவாதத்திலும் ஈடுபடுகின்றவர்கள் ஜனநாயக அரசியல் சமனிலையினை உள்வாங்கி அறிவுபூர்வமாகச் சிந்தித்து தமது கருத்துக்களை முன்வைப்பது சிறப்பானதாகும். வடமாகாண மக்கள் கிழக்கு மாகாணத்தினை வடமாகாணத்துடன் இணைத்துக் கொள்வதற்குத் தமது விருப்பத்தினை தேர்தல்கள் மூலம் வெளியிட்டுள்ளனர். மாகாணசபைக் கட்டமைப்பிற்குள் நின்று சிந்தித்தால் வட மாகாணசபை மக்களின் ஆதரவுடன் கிழக்கு மாகாண சபையுடன் இணைந்து பணியாற்றத் தயாராகவுள்ளது என்ற உண்மை புலனாகும். ஆனால் கிழக்கு மாகாணமக்களும், மாகாணசபையும் இதற்குத் தயாராகவில்லை என்ற உண்மை மாகாண சபைத் தேர்தல்கள் மூலம் புலனாகியுள்ளது. மக்களின் கருத்துக்களுக்கு அப்பால் சென்று மாகாண சபைகளை இணைக்க வேண்டுமாயின் இதற்கான சட்டபூர்வமான அங்கீகாரத்தினை அரசியல் யாப்பு ரீதியாகப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு பெற்றுக்கொள்வதில் பல தடைகள் உள்ளன. உள்நாட்டு யுத்தத்தின் பின்னர் கிழக்கு மாகாணசபை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலிருப்பது இதற்கு மேலும் தடையாக உள்ளது.

மறுபக்கத்தில் கிழக்கு மாகாணத்தின் குடித்தொகை பரம்பலில் ஏற்பட்ட மாற்றத்தினையும் புரிந்து கொள்ளுதல் வேண்டும். 2012 ஆம் ஆண்டு கணிப்பிடப்பட்ட உத்தியோகபூர்வக் கணக்கெடுப்பின் படி கிழக்கு மாகாணத்தின் மொத்த சனத்தொகையில் தமிழ் மக்கள் 39.79 சதவீதமாகவும், முஸ்லீம் மக்கள் 36.72 சதவீதமாகவும், சிங்கள மக்கள் 23.15 சதவீதமாகவும், ஏனையவர்கள் 0.34 சதவீதமாகவும் உள்ளனர் (Security Forces Headquarters (East). இந்நிலையில் மிகவும் இலகுவாக கிழக்கு மாகாண மக்களிடமிருந்து வடக்கு-கிழக்கு மாகாண இணைப்பிற்கான ஆதரவினை பெற்றுவிட முடியாது. புள்ளிவிபரப்படி மூன்று மாவட்டங்களை உள்ளடக்கியுள்ள கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களுக்குச் சமமான வாக்கு வங்கியினை முஸ்லீம் மக்கள் வைத்திருக்கின்றனர். பெருமளவிற்கு அம்பாறை மாவட்டத்தில் முஸ்லீம் மக்கள் பெரும்பான்மையாக வாழ்வதுடன், நிர்ணயம் மிக்க அரசியல் சக்தியாகவும் மாறிவிட்டனர். மேலும்

கிழக்கு மாகாணத்தின் எல்லைப் பகுதிகள் பல சிங்கள மக்களின் வாழ்விடமாக மாற்றமடைந்துள்ளது என்ற உண்மையினையும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். இந்நிலையில் வடமாகாணத்துடன் கிழக்கு மாகாணத்தினை இணைத்தால் தமிழ் மக்கள் அரசியல் அதிகாரம் மிக்க சமூகமாக மாற்றமடைந்து விடுவார்கள். அத்துடன் வடக்கு-கிழக்கு இணைப்பின் மூலம் தமது அரசியல் செயற்பாட்டுத் தளத்தினை நிரந்தரமாக இழந்துவிடுவதற்கு வாய்ப்பு உருவாகலாம் என்ற அச்சம் கிழக்கு மாகாண முஸ்லீம் சமூகத்திடம் தோன்றலாம்.

அதேநேரம் கிழக்கு மாகாண முஸ்லீம் மக்கள் வடமாகாணத்துடன் இணைவதற்கு சம்மதம் தெரிவித்தால் அவர்கள் தமது அரசியல் அபிலாசைகளுக்கான விட்டுக் கொடுப்புக்களை தமிழ் மக்களிடமிருந்து எதிர்பார்க்க கூடும். இதே போன்று கிழக்கு மாகாணத் தமிழ் மக்களும் தமது அரசியல் அபிலாசைகளுக்கான விட்டுக் கொடுப்புக்களை வடமாகாண தமிழ் மக்களிடமிருந்து எதிர்பார்க்கக் கூடும். இவைகள் எல்லாவற்றிற்கும் வடமாகாண தமிழ் மக்கள் தயாராக இருக்கும் நிலையிலேயே தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறிய வடக்கு கிழக்கு இணைந்த மாகாணசபை அல்லது சமஸ்டி முறைமை உருவாக முடியும். கிழக்கு மாகாண தமிழ், முஸ்லீம் மக்கள் வட மாகாண சபையுடன் இணைந்து செயற்பட வேண்டும் என வட மாகாண மக்கள் எதிர்பார்க்கக் கூடாது அல்லது வடக்கு, மற்றும் கிழக்கு மாகாணங்களின் இணைப்பினை யாரும் முன்நிபந்தனையாக விதிக்க கூடாது. அவ்வாறு எதிர்பார்ப்பது அல்லது முன்நிபந்தனை விதிப்பது சிறந்த அரசியல் சாணக்கியமல்ல. தற்போதுள்ள இலங்கையின் அரசியல் காட்சி நிலையிலும், சர்வதேச அரசியல் காட்சிநிலையிலும் இரண்டு மாகாணங்களும் தனித்து இயங்குவதே பொருத்தமானதும், சாணக்கியமானதமாகும். சிறுபான்மை சமூகங்களுக்கு இரண்டு மாகாண சபைகள், இரண்டு முதலமைச்சர்கள் வருவதும் தவறானதல்ல. மிகவும் பாதுகாப்பானது, சாணக்கியமிக்கது. இணைப்பு என்பதை விட சிறந்த அதிகாரப் பகிர்வே இன்றைய தேவையாகும்.

## 8. முன்னோக்கிச் செல்லுதல்

கிழக்கு மாகாண முஸ்லீம் மக்கள் தமது அடையாள கூர்மைப்படுத்தலுக்கு அப்பால், தாம் இலங்கையில் வாழும் பிறிதொரு சிறுபான்மைச் சமூகம் என்பதை மறந்து விடக்கூடாது. கிழக்கு மாகாணத்தில் வாழ்கின்ற தமிழ் மக்களுடன் பல விடயங்களில் இரண்டறக்கலந்து நட்புறவுடன் வாழும் முஸ்லீம் மக்கள் தமிழ் மக்களுடன் இணைந்து அரசியல் அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதற்குரிய சந்தர்ப்பம் உருவாகியுள்ளது. கிழக்கு மாகாணத்தில் வாழ்கின்ற தமிழ் மக்களும், முஸ்லீம் மக்களும் ஒன்றிணைந்து மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை முழுமையாக வழங்கும்படி கோருவதற்காக கிழக்கு மாகாணசபையினை தமது அதிகாரத்தின் கீழ் கொண்டு வர வேண்டும். அதற்கான சட்டரீதியான இடம் கிழக்கு மாகாணசபைச் சூழலில் உள்ளது. எனவே சிறுபான்மை சமூகம் என்ற வகையில்

மாகாணசபைக்குரிய அதிகாரங்களைக் கிழக்கு மாகாணத் தமிழ் மக்களும், முஸ்லீம் மக்களும் முழுமையாகப் பெற்றுக் கொள்ளவும், தமக்குள் அதனைப் பகிர்ந்து கொள்ளவும் முயற்சிக்க வேண்டும்.

தமிழ், முஸ்லிம் அரசியல் தலைவர்கள் வெளிப்படைத்தன்மையுடனும், பொறுப்புடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும். கிழக்கு மாகாணசபையில் கூட்டு அரசாங்கம் உருவாக்கப்பட்டால் முதலமைச்சர் பதவியை இரண்டு வருடத்திற்கு முஸ்லீம் தலைவர்களுக்கு விட்டுத்தர தமிழ் தலைவர்கள் ஏற்கனவே தயாராக இருந்துள்ளார்கள். எனவே கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கான தருணம் நிறையவேயுள்ளது.

மாகாணசபை முறைமை பலப்படுத்தப்படல் வேண்டுமா? என்ற விவாதம் அவசியமற்றதாகும். பதின்மூன்றாவது அரசியல் யாப்புத் திருத்தத்தின் மூலம் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களில் ஒருபகுதியாகிய காணி மற்றும் காவல்துறை அதிகாரங்கள் உட்பட மேலதிகமான அதிகாரங்களும், வளங்களும் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட வேண்டும். இதனை மாகாணசபைகள் பெற்றுக் கொள்வதற்கு மத்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்பு அவசியமானதாகும். தேர்தல் நடைபெற்றால் ஜனநாயகம் நாட்டில் உள்ளது என மிகவும் இலகுவாக யாராலும் கூறிவிடமுடியாது. உண்மையில் இலங்கையில் வாழ்கின்ற எல்லா சமுதாயங்களும் சமாதானமாகவும், சுயகௌரவத்துடனும், நீதியுடனும் வாழ்வதற்குரிய சமூக ஜனநாயகச் சூழலுக்குரிய உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும். இதனை இனமோதலுடன் தொடர்புடைய எல்லாத் தரப்பும் நன்கு விளங்கிக் கொண்டு சமாதானம், சுயகௌரவத்துடனான வாழ்க்கைச் சூழலை உருவாக்க முயற்சிக்க வேண்டும்.

### உசாத்துணை நூல்கள்

Amita Arudpragasam, 08.03.2013, The APRC: A Forgotten Resolution, Ground views, URL Available on https://groundviews.org/2013/08/03/the-aprc-a-forgotten-resolution/

Balachandran P K, September 26th 2012 08:50 AM, No Tamil minister in Eastern Province, New Indian express, URL Available on https://www.newindianexpress.com/world/2012/sep/26/no-tamil-minister-in-eastern-province-409652.html

Colombo Telegraph, September 3rd 2013, Full Text: TNA's Northern Provincial Council Election Manifesto – 2013, URL Available on https://www.colombotelegraph.com/index.php/full-text-tnas-northern-provincial-council-election-manifesto-2013/

Jeyaraj D.B.S, Daily FT, Wednesday, 19 October 2022 00:30, Kandyan Sinhala leaders wanted federalism and N-E merger before Tamils, URL Available on https://www.ft.lk/columns/Kandyan-Sinhala-leaders-wanted-federalism-and-N-E-merger-before-Tamils/4-741083

Lionel Guruge ,2006, Sri Lanka's Ethnic Problem and Solutions, Centre for Policy Alternatives, URL Available on https://www.cpalanka.org/wp-content/uploads/2007/8/Problem_and_Solutions_English.pdf

Mangala Moonesinghe Parliamentary Select Committee- Interim Report 1992,URL Available on https://tamilnation.org/conflictresolution/tamileelam/92selectcommittee.htm

Provincial Council Elections Results 2013, Election Department, URL Available on https://elections.gov.lk/web/wp-content/uploads/election-results/provincial-council-elections/provincial-council-elections-2013.pdf

Provincial Council Elections Results 2008, Eastern Province, North Central Province and Sabaragamuwa Province URL Available on https://elections.gov.lk/web/wp-content/uploads/election-results/provincial-council-elections/provincial-council-elections-2008.pdf

Provincial Council Elections Results 2012, Eastern Province, North Central Province and Sabaragamuwa Province URL Available on https://elections.gov.lk/web/wp-content/uploads/election-results/provincial-council-elections/provincial-council-elections-2012.pdf

Report of The Commission of Inquiry on Lessons Learnt and Reconciliation, November,2011, URL Available on http://www.slembassyusa.org/downloads/LLRC-REPORT.pdf

Security Forces Headquarters (East), URL Available on https://alt.army.lk/sfhqeast/map#:~:text=The%20Eastern%20province's%20population%20was,Lanka%2C%20both%20ethnically%20and%20religiously.

TamilNet, Thursday, 05 December 2002, 12:04 GMT, LTTE, GOSL reach exploratory agreement, URL Available on https://www.tamilnet.com/art.html?catid=13&artid=7937